

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு நேற்று (16.02.2024) திருச்சிராப்பள்ளி மாவட்டம் பூவாளூர் பேரூராட்சியில் மூலதன மானிய நிதித்திட்டத்தின் கீழ் ரூபாய் 1.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், லால்குடி சட்டமன்ற உறுப்பினர். சவுந்தரபாண்டியன், ஒன்றியக்குழு தலைவர் ரவிச்சந்திரன், லால்குடி வருவாய் கோட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், உதவி இயக்குனர், காளியப்பன் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, லால்குடி நகர செயலாளர் துரை, கோல்டன் ரவிச்சந்திரன் செல்வராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரியில் இன்று

## பொதுச் செயலாளர்-அமைச்சர் துரைமுருகன் - அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

### தே.மதியழகன்-ஒய்.பிரகாஷ் அறிக்கை





கிருஷ்ணகிரி, பிப்.17-

கிருஷ்ணகிரியில் நாடாளுமன்றத் தேர்தல் - 2024 "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! மாபெரும் பொதுக்கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

தமிழகத்தில் 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம்,

மக்களின் குறைகள்,

துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட கழக முன்னணியினர் "விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்" என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024-ல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பாஜக அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமைஅ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாக கழக முன்னணியினர்

"உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்"

பாசிசம் வீழட்டும்!

இந்தியா வெல்லட்டும்.

என்ற தலைப்பில் கழக முன்னணியினர் நாடாளுமன்ற தொகுதி வாரியான கூட்டங்களில் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க கழகத் தலைவர் அவர்களின் குரலாக பிப்ரவரி 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் தமிழகம் முழுவதும் நடைபெறும் பரப்புரைக் கூட்டங்கள் பொறுப்பு அமைச்சர்களுடன் இணைந்து, நாடாளு மன்றத் தொகுதிக் குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணியினர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை செயலாளர்கள், பூத் கமிட்டியினர் ஆகியோர் பங்கேற்கும் பிரம்மாண்ட கூட்டங்களாக நடத்திட வேண்டுமென கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதை தொடர்ந்து இன்று (17.2.2024 -சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோரது முன்னிலையில் கிருஷ்ணகிரி, பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, சுங்கச்சாவடி அருகே, ஸ்ரீ தேவராஜா திடல், கலைஞர் அரங்கில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான ஆர.சக்கரபாணி தலைமையில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் திராவிட முன்னேற்ற கழக மூத்த முன்னோடியும், கழக பொதுச்செயலாளரும்,

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்ற உள்ளார். அது சமயம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கழகத்தினர் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

### பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் வருகிற 19-2-2024 முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

### பொருளாளர் டி.ஆர்.பாலு - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

## திருச்சியில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பொதுக்கூட்டம்!

### கழகத்தினருக்கு - திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி வேண்டுகோள்!



திருச்சி, பிப். 17-

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத்தலைவரும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவிற்கே வழி காட்டியாகத் திகழும் திராவிட நாயகனும், தமிழக முதல்வருமான தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல், பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!' என்கின்ற தலைப்பில் மாபெரும் தி.மு.க. பொதுக்கூட்டம் இன்று (பிப்ரவரி 17-சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் புத்தூர் நால்ரோடு அருகில் நடைபெறவிருக்கின்றது.

இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கேஎன். நேரு, அமைச்சர் எஸ். ரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோரும் கழக முன்னணியினரும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்று கின்றனர். இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

